[திருமதி டி. என். அனந்தநாயகி] [5th November 1965

பிரச்னைகளைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. பெரிய ஸ்காட் லான்ட் யார்ட் ப்ரெயின் மாதிரி வேலை செய்கிறது. எப்படி போனால் ஒருவரை இந்த பதவியிலிருந்து நீக்கலாம், எந்தமாதிரியான நெருக்கடியை கொண்டு வரலாம் என்பதற்கெல்லாம் திட்டங்கள் போடப்பட்டிருப்பதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களைப்பற்றி கேட்டால், ஏதோ படிப்பு இல்லை, கைநாட்டு தான் என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு பஞ்சாயத்தை எப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வது என்றால் அவர்களுக்கு அதற்கான வழிகள் எல்லாம் தெரியும். நோட்டீஸ் அனுப்பாமல் இருந்துவிட்டு, அனுப்பியது போல் ரிக்கார்டுகளை வைத்துக்கொள்வது, பின்னால் டிஸ்க்வாலிபிகேஷன் செய்வது, பாக்கியில்லாதவர்களிடத்தில் பாக்கியை ஏற்படுத்துவது, எந்த விதத்தில் நாமினேஷனை சக்தி இல்லாமல் செய்யலாம் என்பதில் எல்லாம் மிக அக்கரையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கும்பல்கள் வேலைகள் செய்து கொண்டிருந்தால் நிச்சயமாக பல தொல்லைகள் தான் ஏற்படும். ஆனால் வரிகள் கொடுக்கவேண்டியவர்கள் இருந்தால், தண்டோரா அல்லது வெட்டியான்கள் மூலமாக தெரிவித்தால் சில தொல்லைகள் இராது என்று நம்புகிறேன். இம்மாதிரிப்பட்ட திருத்தங்களும் தேவை தான். ஏனென்றால் ஒழுங்காக வரி கொடுக்காதவர்கள் பஞ்சாயத்துக்களில் வந்தாலும் நாட்டுக்கு நன்மை கிடையாது. ஆகவே இப்பேர்ப்பட்ட விஷயத்தில் அரசாங்கம் தயங்காது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: Further discussion on the Bill will be continued to-morrow.

1-30 p.m. The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

295. *Notification issued with G.O. Ms. No.* 2071, *Rural Development and Local Administration, dated the* 18th *September* 1965 *declaring that with effect on and from* 1st *October* 1965, *the area specified in the schedule of the notification shall be a township called the "Ambattur Township"* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

B. Reports, notifications and other papers.

'*Nil*'.